OL/2017/11-T-I, II (OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது ]All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

11 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | | |
|---|---|---|
| බුද්ධ ධර්මය | I, II | පැය තුනයි |
| பௌத்தம் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Buddhism | I, II | Three hours |

## பௌத்தம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** "நண்பர்களே! பகவான் கௌதமர் எங்களைக் காண வருவதிலும் பார்க்க நாமே அவரைக் காணச் செல்லுதல் பொருத்தமானது" இது பிராமணர் ஒருவர் புத்தரின் குணச் சிறப்பைப் பற்றி எடுத்துக்காட்டிய வகையாகும். இந்தப் பிராமணரானவர்,
(1) அம்பட்ட (2) ஸோணதண்ட (3) வச்ஜ கொத்த (4) பொட்ட பாத

**2.** "எவன் ஒருவன் தம்மத்தைக் காண்கிறானோ அவன் என்னைக் காண்கிறான்" புத்தர் இதனை உபதேசித்தது,
(1) புண்ண தேரருக்கு (2) ஆனந்த தேரருக்கு
(3) வக்கலி தேரருக்கு (4) கோசல மன்னனுக்கு

**3.** புத்தநிலையை எய்திய பின்னர் புத்தர் ஏழு வாரங்கள் போதி (அரச) மரத்தின் பக்கத்தில் வெவ்வேறு இடங்களில் காலத்தைக் கழித்தார். அதன்படி ஏழாவது வாரத்தை அவர் கழித்தது,
(1) ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வீட்டிலாகும். (2) ராஜாயதன கிரிபலு மரத்தின் கீழேயாகும்.
(3) ஸ்ரீ மகாபோதியின் அருகிலேயாகும். (4) அஜபால ஆலமரத்தின் கீழேயாகும்.

**4.** ஒரு நாளுக்கு ஒரு முறை மட்டும் உணவு உண்ட புத்தர், உணவிற்கு முன்னர் செய்த கடமையாவது,
(1) பெரபத் கிஸ (2) பெரயம் கிஸ (3) பஸ்பத் கிஸ (4) பஸ்லுயம் கிஸ

**5.** அனத்தலக்கண சூத்திரத்தை புத்தர் உபதேசித்தது,
(1) முகலன் தேரருக்கு (2) ஐந்து சந்நியாசிகளுக்கு
(3) சரிபுத் தேரருக்கு (4) பத்தவக்கிய தேரர்களுக்கு

**6.** வீணையை மீட்டிக் கொண்டும் மும்மணிகளின் குணங்களைக் கூறிக்கொண்டும் பாடிய பாடலைக் கேட்ட புத்தர் அதனைப் புகழ்ந்தார். அந்தப் பாடலைப் பாடியது,
(1) ஸக்க தெய்வம் (2) பங்ச ஸிக தேவ மைந்தன்
(3) குத்தில காந்தர்வர்கள் (4) மூஸிக காந்தர்வர்கள்

**7.** "கிருஹஸ்தர்களே! இந்த உடலைத் தாங்கியிருக்கும் எவரும் எந்தவொரு வேளையிலும் தமது உடலை நோயற்றது என்று சொன்னால் அது அறியாமையாகும்." இதனைக் கூறியது.
(1) நகுல பிதாவுக்கு (2) அநாத பிண்டிக செட்டிக்கு
(3) சித்த கிருகபதிக்கு (4) யசரின் தந்தைக்கு

**8.** மனித வர்க்கத்தினால் பெருமளவு மதிக்கப்பட்ட ஒரேயொரு புருஷோத்தமர் புத்தராவார். இவ்வாறு புத்தரை மேன்மைப்படுத்தியவர்,
(1) பேராசிரியர் ஸோன்டர்ஸ் (2) அப்துல் அத்தாஹிலா
(3) எச். ஜி. வேல்ஸ் (4) டாக்டர். ராதாகிருஷ்ணன்

**9.** பல்வேறுப்பட்ட ஏற்றத்தாழ்வுகளையுடைய சமூகத்தினுள் தவறுகள், கெட்ட நடத்தைகள் ஆகியவற்றினால் பாதிக்கப்படாதுள்ள வாழ்க்கையை புத்த சமயம் இவ்வாறு போதிக்கின்றது
(1) தார்மிக வாழ்க்கை (2) பத்மாகார வாழ்க்கை (3) அவிஹிங்ஸக வாழ்க்கை (4) சாம் வாழ்க்கை

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**10.** பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்படுவதன்படி புத்தர் பரிநிர்வாணம் அடைந்த பின்னர் அடுத்து வந்த போதனையாளர்,
(1) சரிபுத் தேரர் (2) முகலன் தேரர் (3) கொண்டஞ்ஞ தேரர் (4) தர்மமும் விநயமும்

**11.** "தன்னிலும் மேலான அல்லது தனக்குச் சமமான நண்பனொருவன் பழகக் கிடைக்காதவிடத்து தனிமையில் வாழுதல் சிறந்தது." எனக் கூறும் தம்மபத காதாவினது முதல் இரண்டு அடிகளாவன,
(1) "அஸாரே ஸாரமதினொ - ஸாரேசாஸார தஸ்ஸினொ"
(2) "அக்கொச்சிமங் அவதிமங் - அஜினிமங் அகாஸி மெ"
(3) "சரங் சே நாதிகச்ஜெய்ய - ஸெய்யங் ஸதிஸமத்தனொ"
(4) "ஸுஸுகங் வத ஜீவாம - வெரினெஸு அவேரினொ"

**12.** "என்னை ஏசினார்கள் ; அடித்தார்கள் ; என்னை வென்றார்கள் ; எனது பொருட்களைத் திருடினார்கள்" என்றிவ்வாறு அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருத்தல் அவனிடத்து,
(1) பொறுமை உருவாகும் (2) பேராசை (தண்ஹா) உருவாகும்
(3) கோபம் உருவாகும் (4) பகைமை உருவாகும்

**13.** சமூகத்தில் மற்றையோர் உயிர்க்கொலை முதலான பத்து அகுசல முறைகளில் தூய்மையற்று இருந்தாலும் அவற்றிலிருந்து விடுபட்டு இருப்போமென தூய்மையான உள்ளத்துடன் வாழுதல் இவ்வாறு கூறப்படும்,
(1) அபண்ணக படிபதா (2) ஸல்லேக படிபதா
(3) அத்துபனாயிக தர்ம பரியாய (4) ஹுஹுங்க படிபதா

**14.** பஞ்ச நீவரண தர்ம, ஐந்து உவமைகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி, உத்தச்ச குக்குச்ச என்பது,
(1) நிறமூட்டிய நீர் போன்றது. (2) கொதிக்கும் நீர் போன்றது.
(3) பாசியுடன் கூடிய நீர் போன்றது. (4) சலனப்படும் நீர் போன்றது.

**15.** அனுலோம படிச்ச சமுப்பாதவின்படி உயிரிகளிடத்து பேராசை (தன்ஹா) உண்டாவது எதனால் எனின்,
(1) உபாதான (2) பஸ்ஸ (3) வேதனா (4) ஸலாயதன

**16.** உள்ளத்தில் அமைதியின்மை, செய்த கெட்டது, செய்யாத நல்லது பற்றி உண்டாகும் நிம்மதியின்மை என்பன நீவரணமாகும். அது இவ்வாறு கூறப்படும்,
(1) உத்தச்ச குக்குச்ச (2) காமச்ஜன்த (3) விசிகிச்ஜா (4) தீன மித்த

**17.** சரியான வழியில் வாழ்வதாவது, சரியான முறையில் தமது வாழ்க்கையை தனது சம்பாத்தியத்தில் வாழ்வதாகும். துறவியாயின் நான்கு தகைமைகளைப் பெறுவதற்காக இல்லாத நற்குணங்களை இருப்பதாகக் காட்டுவது போன்ற உண்மையற்ற செயல்களை செய்யாதிருத்தல் இவ்வாறு கூறப்படும் :
(1) ஸம்மா வாயாம (2) ஸம்மா ஸத்தி (3) ஸம்மா ஆஜீவ (4) ஸம்மா ஸங்கப்ப

**18.** பயன்தரும் காலத்திற்கேற்ப வாழ்க்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன் தரும் கர்மமாவது,
(1) திட்ட தம்ம வேதனீய கர்ம (2) உபபஜ்ஜ வேதனீய கர்ம
(3) அபராபரிய வேதனீய கர்ம (4) அஹோஸி கர்ம

**19.** புத்த சமயத்தின்படி பிராணிகள் உயர்ந்த, தாழ்ந்த என்ற வேறுபாட்டில் பிறப்பது,
(1) கர்மத்தினாலாகும். (2) தாய் தந்தையராலாகும்.
(3) சமூகத்தினாலாகும். (4) சமயத்தினாலாகும்.

**20.** நிப்பான (நிர்வாண) த்திற்கான சீரிய அஷ்டாங்கிக (எட்டு வகை) மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில் ஈடுபடுதல் 'மகா சங்க' என்பதன் பொருளாகும். அது இவ்வாறு கூறப்படும்,
(1) ஸுபடிபன்ன (2) உஜு படிபன்ன
(3) ஞாய படிபன்ன (4) ஸாமீசி படிபன்ன

**21.** பஞ்ச ஸ்கந்த எப்போதும் நிலையான, மாறுபடாததொரு தர்மம் ஆகாது என ஐந்து உவமைகள் மூலம் காட்டப்பட்டுள்ளது. அதன்படி,
(1) வாழைப்பழக் குலை போன்றது. (2) கானல் நீர் போன்றது.
(3) பொய்த்தோற்றம் போன்றது. (4) நீர்க்குமிழி போன்றது.

**22.** அக்கஞ்ஞ சூத்திரத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு விஷ்வத்தின் பரிணாமம்,
(1) காரண, காரிய தொடர்பினால் ஆவது
(2) எல்லாம் வல்ல கடவுளின் விருப்பத்தால் ஏற்படுவது
(3) காரண காரியம் இன்றித் தாமே ஏற்படுவது
(4) ஒருவகை வானரத்தால் ஏற்படுவது

**23.** ரூபம். சப்தம் முதலானவற்றால் கிடைக்கும் விடயங்களிலிருந்தும் கண். காது முதலான இந்திரியங்களால் ஏற்படும் ஆசைகளிலிருந்தும் விலகும் பிரதி பதாவாவது
(1) சீல பாரமிதா (2) னெக்கம்ம பாரமிதா (3) பிரக்ஞா பாரமிதா (4) வீர பாரமிதா

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**24.** சமத பாவனாவின் போது அனுசரிக்கப்படவேண்டிய நாற்பது விடயங்களுக்கு **உரியதல்லாதது,**
(1) தஸ அஸுப (2) சத்தர ஆருப்ப
(3) தஸ அனுஸ்ஸதி (4) சத்தர இத்திபாத

**25.** ஸிகாலோவாத சூத்திரத்தில் கூறப்படும் ஸதிஸா நமஸ்காரத்தில் சிஷ்யன் குருவுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்குரியதல்லாத விடயமாவது,
(1) ஆசனத்திலிருந்து எழுந்து நிற்றல் போன்றவற்றால் கௌரவப்படுத்தல்.
(2) சேவை புரிதல்.
(3) குரு சொல்வதை நன்கு கவனித்தல்.
(4) கெட்ட பழக்கங்களில் ஈடுபடாமை

**26.** காரணீய மெத்த சூத்திரத்தில் வரும் "ஸந்துஸ்ஸக" என்பதன் கருத்து,
(1) அதிகம் செயற்பாடில்லாமை (2) கிடைத்ததைக் கொண்டு சந்தோஷமடைதல்
(3) அமைதியான இந்திரியங்களையுடைமை (4) அறிவுடையராதல்

**27.** பஞ்ச பாவங்கள், பத்து அகுசலங்கள் ஆகிய இவற்றைச் செய்து கொண்டு கெட்ட நடத்தையுடன் சிரத்தா இல்லாது தூய்மையற்ற உள்ளத்துடன், துறவிகளுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டில் வசிக்கும் ஆணையும் பெண்ணையும் புத்தர் ஒப்பிட்டிருப்பது,
(1) ஆணின் சடலத்தை பெண்ணின் சடலத்துடன்
(2) ஆணின் சடலத்தை பெண் தெய்வத்துடன்
(3) தெய்வ புத்திரனை பெண் சடலத்துடன்
(4) தெய்வத்தை பெண் தெய்வத்துடன்

**28.** அற வழியிலான ராச்சிய பரிபாலனத்திற்காகப் புத்தர் பௌத்த கொள்கைத் தொகுதியொன்றைப் போதித்திருந்தார். கீழ்க்காணும் விடயங்களுள் ராச்சிய பரிபாலன கொள்கை **அல்லாதது**
(1) தஸ ராஜ தர்ம (2) சதர சங்கிரக வஸ்து
(3) அபரிஹானிய தர்ம (4) சதர கர்ம கிலேசங்கள்

**29.** "குழந்தாய், இந்த சக்கரவர்த்தி இராச்சியம் உனக்கு தந்தை வழி உரிமையாகக் கிடைத்ததன்று. நீ இதற்காக உரிய முறைப்படி முதலில் தகுதியுடையவனாக வேண்டும்" இக்கூற்று அடங்கியுள்ள சூத்திரமாவது,
(1) கூட தத்த (2) அக்கஞ்ஞ (3) சக்கவத்தி ஸீகநாத (4) மகா ஸீகநாத

**30.** உலகம் ஒரேயொரு மனித ஜாதியைக் கொண்டதாயுள்ளது. உயிரியல் ரீதியாகப் பிரித்துக் காட்டுவதாயின் அது பெண், ஆண் எனப் பிரியும். ஆயினும் அது பால் வேறுபாடு மட்டுமேயன்றி, குல வேறுபாடு அல்ல என்று புத்தர் போதித்தது,
(1) ஸர்வ மித்ர பிராமணருக்கு (2) வாஸெட்ட பிராமணருக்கு
(3) பொக்கரஜாதி பிராமணருக்கு (4) அதின்ன புப்பக பிராமணருக்கு

**31.** முதலாம் பௌத்த மகாசபை கூடிய பின்னர் தர்ம வினயத்தைக் காத்து முன்னெடுத்துச் செல்வதற்காக பாணக பரம்பரையொன்றை அமைத்து அதனிடம் இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது. அதன்படி புத்தக நிகாய ஒப்படைக்கப்பட்டது,
(1) ஆனந்த தேரரைத் தலைமையாகக் கொண்ட சிஷ்ய பரம்பரையிடம்
(2) காஷ்யப தேரரைத் தலைமையாகக் கொண்ட சிஷ்ய பரம்பரையிடம்
(3) சகல பிக்குகளிடமும்
(4) புராண தேரரைத் தலைமையாகக் கொண்ட பிரதான சிஷ்யர்களிடம்

**32.** தேரவாத நான்காம் மகாசபை கிறீஸ்து சகாப்த ஆரம்பத்தில் நடந்த இடமாவது.
(1) பாடலிபுத்ர அசோகாராம (2) மாத்தளை ஆலோக விகாரை
(3) ஸ்ராவஸ்தி ஜேதவனாராம (4) காஷ்மீரிலுள்ள குண்டல வன விகாரை

**33.** தர்மாசோக மன்னனின் தர்ம விஜய கொள்கைக்கு அமைவாக ஒன்பது நாடுகளுக்கு சமயப் பிரசாரத்திற்காக அனுப்பப்பட்டபோது ஸ்வர்ண பூமிக்கு சேவைக்கு அனுப்பப்பட்டவர்,
(1) மஜ்சந்திக தேரர் (2) ஸோணா - உத்தர தேரர்கள்
(3) மஜ்ஜிம தேரர் (4) மஹா ரக்கித தேரர்

**34.** ஆரம்ப காலத்தில் கலைஞர்கள் புத்தரைக் குறிப்பதற்கு சங்கேதங்களைப் பயன்படுத்தினர். அவ்வாறு **பயன்படுத்தப்படாத** சங்கேதம் யாது?
(1) வஜ்ராஸன (2) பத்ம (தாமரை)
(3) போதி (அரசமரம்) (4) ரஷ்மி மாலா (கதிர்க் கற்றை)

**35.** புராதன சிங்கள இலக்கிய பாரம்பரியத்தில் நாட்டின் ஆட்சிக் காலத்திற்கமைவாக இலக்கிய காலமும் பிரிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஏற்ப ஒழுங்காகக் காலம் பிரிக்கப்படும் போது மூன்றாவது காலமாக அமைவது,
(1) அனுராபுரக் காலம் (2) தம்பதெனியக் காலம் (3) குருநாகல் காலம் (4) கம்பளை காலம்

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**36.** அனுராதபுர காலத்திற்குரியதானவற்றுள் எமக்கு எஞ்சிக்கிடக்கும் ஒரேயொரு செய்யுள் ஆக்கமாவது,
(1) ஸியபஸ்லகர (2) கச்ஸிலுமிண (3) முவதெவ்தாவத (4) குத்தில காவியம்

**37.** 'சிங்கள பௌத்த குழந்தைகளே! உயிர் போனாலும் பொய் சொல்லக்கூடாது எனச் சங்கல்பம் செய்துக் கொள்ளுங்கள்' இதனைக் கூறியவர்,
(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கட் (2) ப்லவட்ஸ்கி
(3) மீகொட்டுவத்தே குணாணந்த தேரர் (4) ஸ்ரீமத் அநகாரிக தர்மபால

**38.** "ஸவே மானுஸா மம பஜா" இந்தக் கூற்றுக்கமைவாக இருந்த ஆட்சியாளர் :
(1) தர்மாஷோக மன்னன் (2) கோசல மன்னன் (3) பிம்பிசார மன்னன் (4) அஜாதசத் மன்னன்

**39.** அறவழியில் செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டுமென புத்த சமயம் பௌத்தர்களுக்கு உபதேசித்துள்ளது. அவ்வாறு அறவழியில் செல்வத்தைச் சம்பாதிக்கக்கூடியதொரு வழி **அல்லாதது,**
(1) மந்தை பராமரிப்பு (2) வியாபாரம்
(3) அரச சேவை (4) அடிமைச் சேவை

**40.** தந்த தாது இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது எந்த அரசனின் ஆட்சிக்காலத்திலாகும்?
(1) துட்டகைமுனு மன்னன் (2) வலகம்பா மன்னன்
(3) உபதிஸ்ஸ மன்னன் (4) கீர்த்தி ஸ்ரீ மேவன் மன்னன்

※※

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 | T | I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2017**

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

## பௌத்தம் II

※ **முதலாம்** வினாவும் **இரண்டாம்** வினாவும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) மகாநிஷ்கிரமணத்தின் பின்னர் (வெளியேற்றம்) சித்தார்த்த தபசி முதலில் உண்மையைத் தேடிச் சென்ற ஆசிரியர் **இருவரது** பெயர்களை எழுதுக.

(ii) புத்தர் கடந்து சென்ற இடம் எது?

(iii) புத்த சமயத்தில் காட்டப்படும் குசல மூலங்கள் மூன்றாகும். அவற்றில் **இரண்டினை** எழுதுக.

(iv) **நான்கு** (சதர) சங்கிரக வஸ்துவை எழுதுக.

(v) “ஸப்ப பாபஸ்ஸ அகரணங் - குஸலஸ்ஸ உபஸம்பதா” இந்த அடிகளின் கருத்தை எழுதுக.

(vi) “அத்தீ ஸுக” என்பதன் பொருளை விளக்குக.

(vii) பிம்பிசார மன்னன், அநாதபிண்டிக செட்டி ஆகிய இருவரும் நிர்மாணம் செய்து வழங்கிய **இரண்டு** ஆராமங்கள் எவை?

(viii) “ந ஜச்சா வஸலோ ஹொதி - ந ஜச்சா ஹொதி ப்ராஹ்மனோ” இந்த அடிகள் எதனை வலியுறுத்துகின்றன?

(ix) அமாவதுர, ஸத்தர்மரத்னாவலி ஆகிய நூல்களை இயற்றியவர்களின் பெயர்களை எழுதுக.

(x) ‘ஸந்தகட பஹண’ (சந்திர வட்டக்கல்) என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

**2.** (i) கரணீய மெத்த சூத்திரம் விபரிப்பதற்கு அமைவாக (மெத்) பாவனாவை பின்பற்றுபவரிடத்து இருக்கவேண்டிய குணவியல்புகளுள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) இந்தச் சூத்திரத்தில் காட்டப்படுவதற்கு அமைவாக மைத்ரியை (அன்புடைமையை) எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என விபரிக்குக.

(iii) மெத்த (அன்புடைமை பாவனா)வைக் கடைப்பிடிப்பதென்பது தனிப்பட்ட மன அமைதிக்கும் சமூக நன்மைக்கும் எவ்வாறு உதவும் என்பதை விபரிக்குக.

**3.** (i) “பகையை ஒருபோதும் பகையினால் தீர்க்க முடியாது” என்று எடுத்துக்கூறும் தம்மபத காதாவை எழுதுக.

(ii) அந்த காதாவின் கருத்தினை எழுதுக.

(iii) இந்த காதா போதிக்கும் அறிவுரைகள் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எவ்வாறு உதவும் என்பதைத் தெளிவுப்படுத்துக.

**4.** (i) ஸிகாலோவாத சூத்திரம் போதிக்கும் கடமைகளை நிறைவு செய்வதற்காக மேல், கீழ் திசைகளுக்கு உவமைப்படுத்தப்பட்டவர்கள் யாவர்?

(ii) நீர் காணும் ஒரு சமூகக் குழு, நிறைவேற்றவேண்டிய **மூன்று** கடமைகளை எழுதுக.

(iii) நல்ல சமூக உறவினைக் கட்டியெழுப்புவதற்கு சூத்திரத்திலுள்ள விடயங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விபரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**5.** (i) புத்த சமயத்தின்படி சூழல் என்பதன் பொருளை எடுத்துக்காட்டுக.

(ii) சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை புத்தரும் மதித்திருந்த வகையினை விபரிக்குக.

(iii) சூழல் மாசடைதலைக் தடுத்தல், சூழல் பாதுகாப்பு என்பன சமூகக் கடமையாகும் வகையினைத் தெளிவுப்படுத்துக.

**6.** (i) முதலாவது பௌத்த மகாசபை நடாத்தப்படுவதற்கு ஏதுவாயிருந்த விடயங்களை எடுத்துக்காட்டுக.

(ii) முதலாவது பௌத்த மகாசபை நிகழ்ந்த இடம், அதற்கு ஆதரவு காட்டிய ஆட்சியாளன், தலைமை வகித்துச் செயற்பட்ட ரஹத்தர் என்பவற்றை எழுதுக.

(iii) தர்மம், விநயம் ஆகிய இரண்டிற்கும் எதிர்காலத்தில் பாதுகாப்பினை உண்டு பண்ணுவதற்கு முதலாவது பௌத்த மகாசபை உதவிய வகையினைத் தெளிவுப்படுத்துக.

**7.** (i) கர்பத்தின் அமைப்பிற்கேற்ப தாதுகோபங்கள் (ஸ்தூபங்கள்) ஆறு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றுள் **இரண்டு** வகைகளை எடுத்துக் காட்டுக.

(ii) வட்டதாகை, வாகல்கட ஆகியவற்றைப் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

(iii) இலங்கைச் சிற்பிகளின் கலைத் திறமைகளை தாதுகோப (ஸ்தூப) நிர்மாணத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக.

* * *

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/